# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029136

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V & AC. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 02/2018/AC/CB Date: நாள் 01.02.2018
2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of PC Act 12.00 hrs.
   (ii) Act சட்டம்: Act 1988. Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Two days after 14.7.16 Date to : நாள் வரை 31.01.2018
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 16.45 hrs to 16.47 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.01.2018 Time : நேரம் 18.15 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.01.2018 Time : நேரம்
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil / Typed (Computer)
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 10 km West.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Bharathiyar University, Coimbatore 641046.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Dr. T. Suresh (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Thangaraj.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41/18 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Asst. Professor (g) Address : முகவரி 3/119, Bhagampalayam, Anangur, K. Iyyampalayam Post, P. Velur, Namakkal - 637213.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Dr. A. Ganapathy, Vice Chancellor, Bharathiar University, Coimbatore.
   2) Dr. N. Dharmaraj, Professor, Dept. of Chemistry, Bharathiar University, Coimbatore
   3) Dr. Mathivanan, Director, School of Distance Education, Bharathiar University, CBE.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

*Separate sheet enclosed.*

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T.E. 1/2/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.02.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Dhatchina Moorthy.C
Rank: நிலை D.S.P. ......No. எண் ..........

<u>சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>Contents of FIR in Coimbatore V&AC Cr.No.2/2018/AC/CB u/s 7 of PC Act 1988</u>

உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், (பொறுப்பு) காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர் ஆகிய நான் 29.01.2018 ஆம் தேதி மாலை 18.15 மணிக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் (பொறுப்பு) பணியில் இருந்தபோது, நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம் ஆனங்கூர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.தங்கராஜ் என்பவரின் மகன் திரு.த.சுரேஷ் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் என் முன்பு ஆஜராகி ஒரு புகாரையும், (கணினியில் தட்டச்சு செய்தது) மற்றும் இரண்டு CD-க்களையும் கொடுத்தார். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் த.சுரேஷ், த/பெ தங்கராஜ், வேதியியல் உதவிப்பேராசிரியர், பாரதியார் பலகலைக்கழகம், கோயம்புத்தூர்-641046. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ஐயா, நான் கடந்த 23.11.2016 ஆம் நாள் முதல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றேன். என்னுடைய சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம் ஆனங்கூர் ஆகும். நான் கடந்த 1994-1997 ஆம் வருடங்களில் ஈரோடு வாசவி கல்லூரியில் வேதியியலில் இளங்கலை பட்டப்படிப்பும், 1997-1999 ஆம் வருடங்களில் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் முதுகலை பட்டப்படிப்பும், 1999-2004 ஆம் வருடங்களில் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் முனைவர் பட்டப்படிப்பும் பயின்றேன். இதன் பின்னர் 2004-2007 ஆம் வருடங்களில் முதுநிலை முனைவர் பட்டப்படிப்பை தென்கொரியாவிலுள்ள கொரியா பல்கலைக் கழகத்தில் பயின்றேன். 2007-2008 ஆம் வருடங்களில் ஆராய்ச்சியாளராக கொச்சி சிந்தைட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திலும், 2008-2010 ஆம் வருடங்களில் ஆராய்ச்சியாளராக மும்பை ஆஞ்சநேயா பயோடெக் நிறுவனத்திலும், 2010-2014 ஆம் வருடங்களில்

ஆராய்ச்சியாளராக சென்னை ஈஐடி பாரி நிறுவனத்திலும் மற்றும் 2015-2016 வருடங்களில் ஆராய்ச்சியாளராக பெங்களூர் சமி லேப்ஸ் நிறுவனத்திலும் பணிபுரிந்துள்ளேன். நான்கு வருட முதுநிலை ஆராய்ச்சி அனுபவமும், ஒன்பது வருட ஆராய்ச்சி மேம்பாட்டு அனுபவமும் எனக்கு தகுதியாக உள்ளது. 14.07.2016 ஆம் தேதி கோவை பாரதியார் பல்கலை கழகத்தில் வேதியியல் துறையில் உதவி பேராசிரியராக மற்றும் இணை பேராசிரியர் பணியிடங்களுக்கு விருப்ப விண்ணப்பம் வேண்டி நாளிதழ் மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் விளம்பரம் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் செய்திருந்தது. மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு நான் விண்ணப்பித்திருந்தேன். இந்நிலையில், தற்பொழுது கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் பேராசிரியராக பணிபுரியும் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் செல்போன் மூலமாக தொடர்புகொண்டு, உதவி பேராசிரியர் பணிக்கு பாரதியார் பல்கலைக்கழக் துணைவேந்தர் கணபதி நினைத்தால், வேலை வாங்கி விடலாம் என்றும், அவர் நான் சொன்னால் கேட்பார் என்றும் என்னிடம் கூறினார். மேலும், அப்பணிக்கு பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் கணபதிக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் அதற்கு என்ன என்று கேட்டதற்கு முனைவர் என்.தர்மராஜ் துணைவேந்தருக்கு ரூபாய் முப்பத்தைந்து லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். என்னிடம் பணம் கிடையாது என்று சொன்னேன். அதற்கு அவர் துணை வேந்தரிடம் பேசி பார்ப்பதாகவும், வேறு யாரும் மேற்படி சொன்ன ரூபாய் முப்பத்தைந்து லட்சம் கொடுக்க வரவில்லையென்றால், எனக்கு இதைவிட கம்மியான ரூபாயில் செய்து தருவதாகவும் சொன்னார். நான் அதற்கு யோசித்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். பிறகு ஓரிரு நாட்கள் கழித்து மீண்டும் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டு பேசினார். அப்போது உதவி பேராசிரியர் பணிக்கு பாரதியார் பல்கலைக்கழக் துணைவேந்தர் கணபதி ரூபாய் முப்பது லட்சத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எனவே அந்த தொகையை கொடுத்து வேலை உனக்கு வாங்கி விடலாம் என்றும் என்னிடம் கூறினார். அவர் அவ்வாறு என்னிடம் கூறியதும், எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அதன்பிறகு, நேர்முகத்தேர்விற்கான கால அட்டவணை பல்கலைகழக இணையதளத்தில்

வெளியானது. ஆனால் அடுத்த சில நாட்களில் என்ன காரணம் என்று தெரியாமல், அந்த நேர்முகத்தேர்வு ஒத்தி வைக்கப்பட்டது. இதனிடையில் மீண்டும் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் பேராசிரியராக பணிபுரியும் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டு பல்வேறு துறைகளில் 70-க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்பவிருப்பதாகவும், இதற்கு இன்னும் ஒருசில பணியிடங்களுக்கு பணம் பேரம் பேசியதில் இழுபறி நீடிப்பதாகவும், எனவேதான் நேர்முகத்தேர்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். மேலும் 11.11.2016 ஆம் தேதிக்கு நேர்முகத்தேர்விற்கான கடிதம் வரும் என்று கூறினார். அவர் சொன்னதுபோலவே எனக்கு நேர்முகத்தேர்விற்கான கடிதம் வந்தது. மீண்டும் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டு நேர்முகத்தேர்விற்கான கடிதம் வந்ததா? எனக்கேட்டுவிட்டு, முப்பது லட்சம் ரூபாய் பணம் கொடுக்க சம்மதமா? எனக்கேட்டார். அதற்கு நான் ‘லஞ்சமாக பணம் கொடுக்க முடியாது என்றும், எனக்கு இப்பணி கிடைக்க தகுதியிருந்தால் கிடைக்கட்டும். இல்லையென்றால் பரவாயில்லை’ என்று சொல்லிவிட்டேன். அதற்கு அவர் “அப்படியானால் நாங்கள் வேறொருவரை தேர்வு செய்து கொள்கிறோம்” என்று கூறி போனை வைத்துவிட்டார். இந்நிலையில், நான் என்னுடைய முனைவர் பட்ட வழிகாட்டியாகவும், அப்போது பதிவாளர் பொறுப்பில் இருந்த முனைவர் பி.எஸ்.மோகன் அவர்களை தொடர்பு கொண்டு, முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் பேசியதை, அவரிடம் விளக்கமாகக் கூறினேன். அதற்கு பேராசிரியர் முனைவர் பி.எஸ்.மோகன் அவர்கள் “பணமெல்லாம் கொடுக்க வேண்டாம் என்றும், உனக்கு இப்பணிக்கான முழுதகுதிக்கு மேல் உள்ளது. அதனால் நல்ல முறையில் நேர்முகத்தேர்விற்கு உன்னை தயார் படுத்திக்கொள் என்றும், யாரிடமும் பணத்தை கொடுத்துவிடாதே” என்றும் அறிவுரை கூறினார். நான் 11.11.2016 ஆம் தேதி நடைபெற்ற நேர்முகத்தேர்வில் நல்ல முறையில் செய்தேன். நேர்முகத்தேர்வு முடிந்து நான் பெங்களூருக்கு பணி செய்ய சென்றுவிட்டேன். பிறகு எனது நண்பர்கள் மூலமாக 22.11.2016 ஆம் தேதி பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு கூட்டம் நடைபெறுவதை அறிந்து, நான் எனது ஆசிரியரிடம் “இன்று பல்கலைக்கழக ஆட்சிக்குழு கூட்டம் நடைபெறுகிறதா? என்று கேட்டேன். அதற்கு அவர் “ஆம்” என்று கூறினார்.

மீண்டும் அன்று இரவு நான் எனது ஆசிரியரை தொடர்பு கொண்டு, கூட்டம் முடிவில் என்ன நடந்தது என்றும், நான் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளேனா? என்று கேட்டேன். அதற்கு அவர் இன்று பல்கலைக்கழக ஆட்சிக்குழு கூட்டம் நடந்து முடிந்துவிட்டது என்றும், நான் தகுதியின் அடிப்படையில் உதவி பேராசிரியர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டிருப்பதகாவும், வாழ்த்துக்கள் என்றும் கூறினார். அதனடிப்படையில் நான் 23.11.2016 ஆம் தேதி காலையில் பல்கலைக்கழக துணை வேந்தரிடம் கடிதம் பெற்றுக்கொண்டு இப்பணியில் சேர்ந்தேன். இதனிடையே சில நாட்களில், பதிவாளர் பொறுப்பில் இருந்த முனைவர் பி.எஸ்.மோகன் அவர்கள் விலகினார். அதன்பிறகு சிலநாட்கள் கழித்து மீண்டும் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் பேராசிரியராக பணிபுரியும் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் என்னிடம் நேரடியாக “தற்போது பதிவாளர் பணியில் மோகன் இல்லையென்றும், துணைவேந்தர் இப்பணிக்கு முப்பது லட்சம் ரூபாய் உன்னிடம் வாங்கி கொடுக்க வேண்டும் என்றும், இல்லையென்றால், பணி நிரந்தரமாக்க மாட்டோம் என்றும், இரண்டு வருடத்திற்குள் உனக்கு சிக்கல்களை கொடுத்து இப்பணியிலிருந்து வெளியேற்றுவோம் என்று மிரட்டும் வகையில் கூறினார்”. பின்னர் இது தொடர்பாக துணை வேந்தர் முனைவர் கணபதியை சென்று பார்த்தபோது அவரும் இதையே கூறினார். இதன் காரணமாக எனக்கு பயமாகவும், மன உளைச்சலாகவும் இருந்தது. இதற்கிடையே, நான் 17.11.2017 ஆம் தேதியிலிருந்து 14.12.2017 வரை நடைபெற்ற பணித்திறன் மேம்பாட்டு ஒருங்கிணைப்பு பயிற்ச்சியில் கலந்து கொண்டிருந்தபோது 21.11.2017 ஆம் தேதி மாலை 5 மணிக்குமேல் கோவை பாரதியார் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டுதுறை இயக்குநர் முனைவர் மதிவாணன் அவர்கள் என்னை அவருடைய அறைக்கு அழைத்தார். நானும் அவருடைய அறைக்கு சென்றேன். சிறிது நேரத்தில் முனைவர் என்.தர்மராஜ் அவர்களும் அந்த அறைக்கு வந்தார். இவர்கள் இருவரும் என்னிடம் முப்பது லட்சம் பணத்தை எப்போது துணைவேந்தருக்கு கொடுப்பாய் என்று கேட்டார்கள். மேலும் மாதம் கொஞ்சம் கொஞ்சமாக பணத்தை கொடுத்திருந்தாலும் கூட இந்நேரம் பதினைந்து லட்சத்தை நீ துணைவேந்தருக்கு கொடுத்திருக்கலாம். இன்னும் பாதிதானே இருந்திருக்கும் என்று இருவரும் என்னிடம் கூறினார்கள். மேலும் மதிவாணன் அவர்கள் தனியார் வங்கியிலாவது லோன் ஏற்பாடு செய்து கொடுத்துவிடு என்று

கூறினார். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. இருப்பினும் எனக்கு வேறுவழி தெரியாமல், நான் எனது குடும்பத்துடன் நிம்மதியாக வாழ்க்கை நடத்தவேண்டும் என பயந்து நினைத்து “என் பெயரிலுள்ள நிலத்தை விற்றாவது பணம் தருகிறேன்” என்று முனைவர் என்.தர்மராஜ் அவர்களிடம் கூறினேன். தற்போது 22.01.2018 ஆம் தேதி முனைவர் என்.தர்மராஜ் என்னை நேரில் சந்தித்து நாளை (23.01.2018) மாலை 6 மணிக்குமேல் துணைவேந்தரை பார்க்க இருவரும் செல்லலாம் என்று கூறினார். அதன்படி துணைவேந்தரை சந்திக்க என்னை முனைவர் என்.தர்மராஜ் துணைவேந்தர் அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது துணைவேந்தர் வேறொரு மீட்டிங்கில் இருந்ததால், அன்று சுமார் இரவு 8 மணிவரை துணைவேந்தரின் வரவேற்பு அறையில் நானும், முனைவர் என்.தர்மராஜ் அவர்களும் காத்திருந்தோம். அதன்பின் கூட்டம் முடிந்து அனைவரும் சென்றபிறகு, துணைவேந்தரின் அறைக்கு என்னை முனைவர் என்.தர்மராஜ் அழைத்து சென்றார். அப்போது துணைவேந்தர், தர்மராஜிடம் “என்ன சொல்கிறார் சுரேஷ்” என்று கேட்டார். நான் அதற்கு முனைவர் என்.தர்மராஜ் அவர்களிடம் பயந்து சொன்னதுபோல, துணைவேந்தரிடமும் “மார்கழி மாதமாக இருந்ததால் நிலத்தை விற்க முடியவில்லை என்று சொன்னேன். இடையில் துணைவேந்தரிடம் முனைவர் என்.தர்மராஜ் அவர்கள் செவ்வாய்கிழமைக்குள் ஏதாவது ஒரு தொகை பணத்தை கொடுத்துவிடுவார் என்றும், மீதித்தொகைக்கு நான்கு வங்கி காசோலையை கொடுத்துவிடுவார் என்றும் கூறினார். அதற்கு துணைவேந்தர் என்னைப் பார்த்து “சீக்கிரம் பணத்தை கொடுங்கள் நிறைய செட்டில்மெண்ட் இருக்கிறது” என்று சொன்னார். பிறகு சிறிது நேரம் எனது துறையிலிருப்பவர்களை பற்றி பேசிவிட்டு, என்னிடம் சீக்கிரம் முடிந்த பணத்தை ரெடி பண்ணி கொடுக்குமாறும், மீதி தொகைக்கு நான்கு வங்கி காசோலையை கொடுக்குமாறும் துணைவேந்தர் என்னிடம் சொல்ல, அதற்கு தர்மராஜ் “சுரேஷ்” மீது நம்பிக்கையிருக்கிறது” என்று துணைவேந்தரிடம் சொல்லி வரும் செவ்வாய்கிழமை முடிந்த பணத்தையும் மீதி தொகைக்கு நான்கு காசோலையையும் ரெடி பண்ணி கொடுக்குமாறு சொல்லி என்னை வெளியே அனுப்பினார்கள். துணைவேந்தர், பல்கலைக்கழக தலைவராக இருப்பதாலும், தர்மராஜும் மதிவாணனும் அவருடைய நண்பர்களாக இருப்பதாலும் தற்போதைய காலகட்டம் மிகவும் மோசமாக இருப்பதாலும் எனக்கு

உடனடியாக அவர்கள் மீது புகார் கொடுக்க மிகவும் பயமாக இருக்கிறது. எனக்கு எனது பணியை நிரந்தரமாக்கவும், தொல்லை தராமல் வேலையைவிட்டு நீக்காமல் இருப்பதற்காகவும், பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கணபதிக்கு லஞ்சமாக பணமோ காசோலையோ கொடுக்க விருப்பமில்லை. எனவே துணைவேந்தர் முனைவர்.கணபதி மீதும், அவருக்காக என்னிடம் பணம் கேட்டு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கும் முனைவர் தர்மராஜ் மற்றும் முனைவர் மதிவாணன் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் இவர்களுடன் பேசியபோது பதிவுசெய்துள்ள CD-யை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். தங்கள் உண்மையுள்ள, த.சுரேஷ் Sd (த.சுரேஷ்) Sir, Received the complainant on 29.01.18 at 18.15 hrs Sd/(C.DHATCHINAMOORTHY) Dy. Supdt of Police, V & AC, Udhagamandalam, i/c Coimbatore. Sir, the complainant was sent to DVAC by email seeking Preliminary enquiry on 29.1.18 at 18.45 hrs Sd/(C.DHATCHINAMOORTHY) Dy. Supdt of Police, V & AC, Udhagamandalam, i/c Coimbatore. Sir, After receiving memorandum to register Preliminary enquiry from the Director, Vigilance and Anti Corruption in PE No.23/2018/EDN/CB, a preliminary enquiry was registered on 29-1-18 at 19.15 hrs Sd/(C.DHATCHINAMOORTHY) Dy. Supdt of Police, V&AC, Udhagamandalam, i/c Coimbatore. Sir, During preliminary verification, the two CDs handed over by the complainant along with the complaint was heard in the presence of the complainant. In order to further confirming the demand, the complainant was asked to meet the accused and record the conversation in his voice recording device. Accordingly, the complainant went to VC's chamber on 30.01.2018 at 17.00 hrs and he was not available. Hence, the complainant went to VC's chamber next day i.e. 31.01.2018 at 10.30 hrs and he was not available. Hence, the complainant approached the Professor Dr.N.Dharmaraj on 31.01.2018 at 16.45 hrs. The conversation between the complainant Dr.T.Suresh and A-2 Dr.N.Dharmaraj on 31.1.2018 between 16.45 and 16.47 hrs at office of the Professor Dr.N.Dharmaraj was recorded in the voice recording device of the complainant and the said device was handed over by the complainant. During the above said two days

Gr I PC 387 Tr.P.Manikandan had accompanied the complainant. The above mentioned three conversations when heard confirmed the demand of illegal gratification by A2 and A3 on behalf of A1 and the direct demand made by A1 and thereby a prima facie case was made out. The conversation when heard it revealed that, the accused demanded initially Rs.5 Lakhs and for the balance amount the accused instructed to give in cheques and as the complainant expressed his inability finally it was settled to give maximum amount that can be arranged by the complainant and for the balance amount the complainant was instructed to give through cheques on Friday morning. After getting oral permission from the DVAC, the case in Coimbatore V&AC Cr.No.2/2018/AC/CB u/s 7 of PC Act 1988 was registered on 01.02.2018 at 12.00 hrs and took up investigation. Sd/(C.DHATCHINAMOORTHY) Dy. Supdt of Police, V & AC, Udhagamandalam, i/c CBE 1-2-18. The FIR along with complaint dated 29.01.2018 of Dr.T.Suresh, and two CDs given with complaint in which one CD containing audio conversation made between the complainant Dr.T.Suresh, Professor Dr.N.Dharmaraj and the Director Dr.Mathivanan and another CD containing the audio conversation made between complainant Dr.T.Suresh and Vice Chancellor Dr.A.Ganapathy and Professor Dr.N.Dharmaraj and also the voice recording device containing the conversation made between the complainant and Dr.N.Dharmaraj recorded on 31.01.2018 between 16.45 and 16.47 hrs are sent to the Hon'ble Spl. Court for Cases Under The Prevention of Corruption Act, Coimbatore. The copy of FIR is submitted to the officers concerned.

(C. தட்சிணாமூர்த்தி)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்,
(பொறுப்பு) கோயமுத்தூர் மாவட்டம்.

1-2-18.